கனம் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்.
முன்னிலை : திரு. E.மணிகண்டன், B.A., B.L.,
முதன்மை மாவட்ட உரிமையில் நீதிபதி (FAC),
திருமங்கலம்.

2025ம் வருடம் டிசம்பர் மாதம் 05ம் தேதி வெள்ளிக்கிழமை
இடைநிலை மனு எண்.56/2025
இன்
அசல் வழக்கு எண்.170/2010
* * * *

1. லெட்சுமி
2. நானம்மாள்
3. சுரேஷ் ... மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

/ எதிர்/

சுப்பம்மாள் ... எதிர்மனுதாரர்/வாதி

இறுதியாக இம்மனுவானது 19.11.2025ல் இந்நீதிமன்றத்தில் இறுதி விசாரணைக்காக வந்த போது மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.G.அடைக்கலம் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.N.நமச்சிவாயம் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைக்கு போதிய வாய்ப்பளித்தும், மனு, எதிருரை மற்றும் வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் முன் பரிசீலனையின் கீழ் இருந்து வந்த வழக்கில் இன்று திறந்த நீதிமன்றத்தில் பிறப்பிக்கும்...

**<u>உத்தரவு</u>**

1.1) இம்மனுவானது 15.05.1982ம் தேதியிட்ட பதிவு செய்யப்படாத பாகப்பிரிவினை பத்திரத்தை Impound செய்ய வேண்டி இந்திய முத்திரைச்சட்டம் பிரிவு 35ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டு உள்ளது.

1.2) எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் இம்மனுவினை அனுமதிக்க கூடாது என்று ஆட்சேபணை செய்து எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2. இம்மனுவில் தீர்மானிக்கவேண்டிய பிரச்சனை என்னவென்றால், இம்மனு சட்டப்படி நிலைக்கத்தக்கதா? இல்லையா? என்தேயாகும்</u>**

இருதரப்பும் போதிய வாய்ப்பளித்தும், வழக்கு ஆவணங்கள் யாவும் பரிசீலனை செய்யப்பட்டது. இருதரப்பிலும் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

2.1) மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு மனுவில், வழக்குச் சொத்து தொடர்பான 15.05.1982ம் தேதி பதிவு செய்யப்படாத பாகப்பிரிவினை பத்திரத்தை பிரதிவாதிக்கு ஆதரவாக எழுதிக்கொடுத்தாகவும், இந்நிலையில், மேற்படி ஆவணமானது தாவா சொத்தில் பிரதிவாதிகளுக்கு உரிமை உள்ளது என்பதை காட்டக்கூடிய முக்கியமான ஆவணம் என்றும், அது பதிவு

செய்யப்படாமல் உள்ளது என்றும், என மேற்படி ஆவணத்திற்கான உரிய முத்திரை கட்டணம் செலுத்த அனுமதிக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

2.2) மனுதாரர்கள் மனுவில் பாகப்பிரிவினை பத்திரம் என்று கூறும் ஆவணமானது முத்திரை தாளில் எழுதப்படவில்லை. மேலும், மேற்படி ஆவணத்தில் கூறப்பட்டுள்ள சொத்து விவரமானது முழுமையானதாக காணப்படவில்லை. மேற்படி ஆவணத்தில் சொத்து விவரத்தில் பெரியகாட்டில் தென்பக்கம் 3வது இலக்க தாரருக்கு, மஞ்சணத்து மரத்துக்காடு 2வது இலக்க தாரருக்கு, ஐய்யர்காடு 3வது இலக்க தாரருக்கு என்று மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி சொத்து குறித்த இதர விவரங்களான புல எண், விஸ்தீரணம், எந்த கிராமத்தை சார்ந்த சொத்து என்ற எந்த விவரமும் மேற்படி பாகப்பிரிவினை ஆவணத்தில் காணப்படவில்லை.

2.3) இந்நிலையில், மேற்படி சொத்து விவரம் முழுமையாக இல்லாத ஆவணத்தை வைத்து அதற்கு முத்திரை கட்டணம் நிர்ணயிக்க இயலாது. மேற்படி, மனுதாரர்கள் தரப்பில் பாகப்பிரிவினை பத்திரம் என்று கூறும் 15.05.1982ம் தேதியிட்ட ஆவணம் ஒரு முழுமையான பாகப்பிரிவினை ஆவணமாக காணப்படாத நிலையிலும்,

மேற்படி ஆவணத்திற்கு முழுமையான முத்திரைக்கட்டணம் நிர்ணயிக்க இயலாது என்ற நிலையிலும், இம்மனு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்று இந்நீதின்றம் தீர்மானிக்கின்றது.

**முடிவாக,** இம்மனுவானது தள்ளுபடி செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது. செலவு தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்பு என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு 05.12.2025ம் தேதியன்று இந்த திறந்த நீதிமன்ற அவையறிய பகரப்பட்டது.

ESWARAN MANIKANDAN
Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.12.05 13:54:03 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),
திருமங்கலம்.

**1. மனுதாரர் தரப்பு சாட்சி:–** இல்லை
**2. மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:–** இல்லை
**3. எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி:–** இல்லை
**4. எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:–** இல்லை

ESWARAN MANIKANDAN
Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.12.05 13:54:12 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),
திருமங்கலம்.

இடைநிலை மனு எண்.56/2025
இன்
அசல் வழக்கு எண்.170/2010
வரைவு/ செவ்வை உத்தரவு
நாள்: 05.12.2025